**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC No. 156 of 2014** |
| Deposition of witness | : | **PW - 4** |
| Name | : | **சுப்பிரமணியன்** |
| Father Name | : | **சுப்பையா** |
| Age | : | **56** |

**A1, A4 died. Other all accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 15.06.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சின்னார் குளத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இசக்கிமுத்து, திருமலை நம்பி ஆகியோரை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகின்றன)**

2. கடந்த 08.10.2013 ஆம் தேதி காலை 9 மணிக்கு பெருமாள் கோவில் தெரு கண்ணன் சிலை அருகே இசக்கிமுத்து நடந்து வரும் பொழுது இந்த வழக்கின் எதிரி சங்கரநாராயணன் TN 72 K 0729 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் இசக்கிமுத்துவை இடிப்பது போல் ஓட்டி வந்து, அதனை தட்டிக் கேட்ட இசக்கிமுத்துவை கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, அடுத்து காயம் ஏற்படுத்தி பின்பு

அவருடன் வந்த ஆஜர் எதிரிகள் இசக்கிமுத்துவை கைகளாலும் கால்களாலும் தாக்கி ஊமை காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்களது ஊரை சார்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.06.15 05:42:20 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC No. 156 of 2014** |
| Deposition of witness | : | **PW - 5** |
| Name | : | **ஆறுமுகம்** |
| Father Name | : | **சுடலைக்கண்ணு** |
| Age | : | **47** |

**A1, A4 died. Other all accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 15.06.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ராமானுஜம் புதூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள ஆறுமுகம் என்ற முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் மேற்படி கையப்பத்தினை எப்போது செய்தேன் என்று ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி பார்வை மகஜரில் உள்ள ஆறுமுகம் என்ற கையொப்பம் **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது .**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகின்றன)**

2. கடந்த 08.10.2013 ஆம் தேதி இரவு 11.15 மணிக்கு நானும் சாட்சி கணபதியும், பெருமாள் கோவில் தெரு கண்ணன் சிலை அருகே நின்று கொண்டிருந்தபோது சேர குளம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர்

அங்கு வந்து எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அதற்கு சாட்சியாக நானும் கணபதியும் கையொப்பம் செய்தோம் என்று போலீசாரில் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்களது ஊரை சார்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.06.15 05:42:28 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்